Salve Regina

**Society of St. Pius X**, Palayamkottai.
Tel:0462-2586201; 2572389. e-mail: sspxindia@gmail.com

**மே 2007 மலர்: 2 இதழ்: 5**
**(தனிச்சுற்றுக்கு மட்டும்)**

# நமதாண்டவரின் மோட்ச ஆரோகணம்

### “பரலோகத்திற்கு எழுந்தருளி, எல்லாம் வல்ல பிதாவாகிய சர்வேசுரனின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்”

சேசுவில் அன்பார்ந்த விசுவாசிகளே,

இதுவே நமது விசுவாசம். ஆம்! நமது இரட்சண்யத்திற்காக பாடுபட்டு, மரித்து உயிர்த்தெழுந்த நமதாண்டவர் நாற்பதாம் நாளில் பரலோகத்திற்கு எழுந்தருளி பரமபிதாவின் வலது பக்கத்தில் மகிமையோடு வீற்றிருக்கிறார். இந்த சத்தியத்தை ஏற்றுக்கொண்டு அடிக்கடி, குறிப்பாக ஞாயிறு திவ்விய பலிபூசையில் விசுவாசபிரமாணத்தின் போது நாம் அறிக்கையிடுகிறோம்.



அதுமட்டுமல்லாது, ஜெபமாலையின் மகிமை தேவ இரகசியங்களில் ஒன்றான நமதாண்டவரின் மோட்ச ஆரோகணத்தை தியானித்து, தேவ நம்பிக்கை என்கிற புண்ணியத்தைக் கேட்டு ஜெபிக்கிறோம். ஏனெனில் ஆண்டவரின் மோட்ச ஆரோகணம் அவர் நமக்காகப் பாடுபட்டு சிந்தின திரு இரத்தப் பலன்களால் நமது பாவங்கள் அனைத்தும் பொறுக்கப்பட்டு, சர்வேசுரனுடைய வரப்பிரசாதங்களையும், மோட்சப்பாக்கியத்தையும் பெறுவோம் என்ற திடமான நம்பிக்கையை நமக்கு ஊட்டுகிறது.

இந்த நாளை கடன்திருநாளாக அனுசரிக்கக் கட்டளையிட்டுள்ள தாயாகிய திருச்சபை தமது மக்களாகிய நாம் இவ்வுலக நாட்டங்களில் சிக்கிக்கொள்ளாமல் நமது நேசத்திற்குரிய ஆண்டவர் ஆரோகணித்திருக்கும் மோட்சத்தின் மீது எப்போதும் சிந்தையாக இருக்கும்படி தூண்டுகிறது. இதனையே ஆண்டவரின் ஆரோகணத் திருநாள் பலிபூசையின் சபைச் செபத்தின் (collect): “சர்வ வல்லபரான சர்வேசுரா, தேவரீருடைய ஏக பேறான திருக்குமாரனும், எங்கள் இரட்சகருமானவர் இன்று பரலோகத்திற்கு எழுந்தருளினார் என்று விசுவசிக்கிற நாங்களும் நினைவினால் பரலோகத்திலே வாசம்செய்யும்படி எங்களுக்கு கிருபை செய்யத் தேவரீரை மன்றாடுகிறோம்” என்று ஜெபிக்கிறது.

நமதாண்டவரின் ஆரோகணம் எங்கிருந்து, எவ்வாறு, எதற்காக நிகழ்ந்தது என்பதை சற்று தியானிப்போம்.

### நமதாண்டவர் எங்கிருந்து ஆரோகணமானார்?

ஜெருசலேம் நகரை அடுத்த பெத்தானி என்ற ஊரை ஒட்டி இருக்கும் ஒலிவ மலையிலிருந்து நமதாண்டவர் பரலோகத்திற்கு எழுந்தருளிச் சென்றார். இம்மலை “மூன்று ஒளியின் (வெளிச்சங்கள்) மலை” என்றழைக்கப்படுகிறது. அது எதற்கெனில், மூன்று வகைகளிலான வெளிச்சங்கள் இம்மலையின் மேல் விழுகின்றன. மேற்கு திசையிலிருந்து ஜெருசலேம் தேவாலயத்தின்

**“உங்களிடத்தினின்று பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த சேசுநாதர் எப்படிப் பரலோகத்திற்கு எழுந்தருளிப்போகக் கண்டீர்களோ, அப்படியே திரும்பவும் வருவார்...”** (அப். நட. 1:11)

பீடத்திலிருந்து அணையாது எந்நேரமும் எரிந்துகொண்டிருக்கும் விளக்கின் வெளிச்சம் இம்மலையின் மீது விழுகிறது. காலை வேளையில் சூரியனின் ஒளி கிழக்கு திசையிலிருந்து ஜெருசலேம் நகர் மீது விழுவதற்கு முன்பாக, மேலே உயர்ந்து நிற்கும் ஒலிவ மலையில் பட்டு அதை ஒளிரச் செய்கிறது. மூன்றாவதாக இம்மலையில் காணப்படும் ஒலிவ மரங்கள் ஒலிவக் கனிகளை அபரிமிதமாகத் தந்து ஒளி தரும் விளக்கெரிக்கத் தேவையான ஒலிவ எண்ணெய்யைத் தயாரிக்க உதவுகின்றன. இதன் மூலமாக வெளிச்சத்திற்குக் காரணமாகிறது.

இந்த மூன்று ஒளிகளின் மலையிலிருந்தே, பாவமென்னும் அந்தகாரத்தை விரட்டி ஒழிக்க வந்த உலகின் ஒளியான சேசு கிறீஸ்து ஒளியாக மோட்சமேகினார்.

ஆண்டவர் பரலோகத்திற்கு எழுந்தருளிப் போனபோது, அவர் நின்றிருந்த பரிசுத்த இடத்தில் அவரது திருப்பாதங்களின் சுவடுகளை இன்றும் காணலாம்! இதனைப் பற்றி விவரிக்கும் ஜெருசலேம் நகர் மேற்றிராணியாராகிய சுல்பீசியுஸ் மற்றும் க்ளாஸ் (Gloss) என்பாரும் அந்த இடத்தில் தேவாலயம் கட்டும்போது ஆண்டவரின் பாதங்கள் படிந்த இடத்தில் வேறு கற்களைப் பதிக்க முடியாது போயிற்று என்றும், அதன் மீது சலவைக் கற்களை பதிக்க முற்படும்போது அக்கற்கள் வெடித்து சிதறி மேலே எழும்பி அதைப் பதித்தவர்களைத் தாக்கின என்றும் கூறுகிறார்கள். (ஆதாரம் - the Golden Legend Readings on the Saints - Vol.1)

### ஆண்டவர் எவ்வாறு ஆரோகணமானார்?

"...கீழ்த்திசையை நோக்கி வானங்களின் மேல் எழுந்தருளின சர்வேசுரனுக்குச் சங்கீதம் பாடுங்கள்" (சங். 67:30) என்று நமதாண்டவரின் ஆரோகணத்தைக் குறிப்பிடுகிறார் தாவீது அரசர். ஆம்! சேசு கிறீஸ்து தமது சொந்த தெய்வீக வல்லமையினாலே பரலோகத்திற்கு எழுந்தருளிச் சென்றார். அவரே சர்வேசுரன் ஆனதால், அவர் ஆரோகணமாவதற்கு எந்த படைக்கப்பட்ட வஸ்துக்களின் உதவியோ அல்லது சாதனங்களின் பயனோ தேவையாயிருக்கவில்லை. அதனால்தான், சுவிசேஷமும் "பரலோகத்தினின்று இறங்கினவரும், பரலோகத்திலிருக்கிறவருமான மனுமகனைத் தவிர பரலோகத்திற்கு ஏறினவர் ஒருவருமில்லை" (அரு. 3:13) என்று சான்று பகர்கின்றது.

### ஆண்டவர் எதற்காக ஆரோகணமானார்?

அவர் நம்மீது கொண்ட அன்பினாலேயே மோட்சத்திற்கு எழுந்தருளியுள்ளார். ஏனெனில்,

(1) அவர் அங்கே மோட்சத்தில் நமக்காக இடம் தயார் செய்யவே ஆரோகணமானார் --- "என் பிதாவின் வீட்டிலே அநேக வாச ஸ்தலங்கள் உண்டு... உங்களுக்கு ஒரு ஸ்தலத்தை ஆயத்தஞ் செய்யப் போகிறேன்" (அரு. 14:2)

(2) பாவிகளாகிய நமக்காக பிதாவிடம் மனுப்பேசுவதற்காக ஆரோகணமானார் --- "நீதிபரனாகிய சேசுகிறீஸ்துநாதர் பிதாவினிடத்தில் நமக்கு மனுப் பேசுகிறவராயிருக்கிறார்" (1அரு. 2:1)

(3) சர்வேசுரனிடத்தில் நமக்காகப் பரிந்து பேசுவதற்காக ஆரோகணமானார் --- "அவரே சர்வேசுரனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறவர்; நமக்காக பரிந்து பேசுகிறவரும் அவரே" (ரோம. 8:34).

(4) சேசு கிறீஸ்து பிரதான குருவாக இருந்து நமக்காக சர்வேசுரனிடம் மன்றாடுகிறார் --- "பரலோகத்திலுள்ள (தேவ) மகத்துவ ஆசனத்தின் வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறவரும், பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால் ஸ்தாபிக்கப்படாமல் ஆண்டவரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் குருத்துவ ஊழியஞ் செய்கிறவருமாகிய பிரதான குருப்பிரசாதி நமக்கு உண்டு" (எபிரே. 8:1-2).

(5) சேசு கிறீஸ்து நமது பாவங்களுக்காக தம்மையே பலியாக்கி, பரிகரிக்கும் மத்தியஸ்தராக இருக்கிறார் --- "முந்தின உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களைப் பரிகரிக்கும்படி தாம் அடைந்த மரணத்தால் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராய் இருக்கிறார்" (எபிரே. 9:15).


நமது மீட்பரான சேசு கிறீஸ்து மோட்சத்திற்கு எழுந்தருளி பிதாவின் வலது பக்கத்தில் வீற்றிருந்து, தமது காயங்களை பரமபிதாவுக்குக் காட்டி அவரது இரக்கத்தை உலகத்தில் பொழியச் செய்து வருகிறார்.

இவ்வளவு முக்கியம் வாய்ந்த திருநாளை நாம் நல்ல தயாரிப்புடன் அனுசரிக்க வேண்டும். திருச்சபை ஆசிப்பது போல "நமது நினைவினால் பரலோகத்திலே வாசம் செய்ய வேண்டும்" (ஆரோகணத் திருநாள் சபைச்செபம்). பொக்கிஷம் எங்கு உண்டோ அங்கேதான் நமது உள்ளமும் இருக்கும் என்பது வாக்கு. அதுபோல நமது பொக்கிஷமான நமதாண்டவர் இருக்கும் பரலோகத்தைச் சார்ந்தவர்களாக இவ்வுலக வாழ்வை செலவிடுவோமாக.

**அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை**
**பாளையங்கோட்டை**

## கத்தோலிக்க வழிபாட்டு சடங்குகளின் அர்த்தம்

### பாஸ்கு திரி அணைக்கப்படுதல்!



**ஈஸ்டர் திருவிழிப்பு சடங்கிலே மந்திரிக்கப்படும் பாஸ்கு திரியானது உயிர்த்த ஆண்டவர் சேசு கிறீஸ்துவை அடையாளமாகக் காட்டுகிறது. நமதாண்டவர் மோட்ச ஆரோகணத் திருநாளன்று, பூசையில் சுவிசேஷம் வாசிக்கப்பட்ட பின்பு இப்பாஸ்கு திரியானது அணைக்கப்படுகிறது! ஏனெனில் காணக்கூடிய விதமாக இருந்த ஆண்டவர் இப்பூவுலகை விட்டு மோட்சத்திற்கு ஆரோகணமாகி விட்டார் என்பதைச் சுட்டிக்காட்டவே இந்தச் சடங்கு முறை அனுசரிக்கப்படுகிறது.**

# மே மாதம்
# தேவதாயின் வணக்க மாதம்!

## வணக்க மாதத்தின் வரலாறு



மே மாதம் மிகவும் விசேஷமான மாதம். குறிப்பாக ஐரோப்பிய நாடுகளுக்கு அது வசந்த காலத்தின் மத்திய மாதமாக இருப்பதால், இரவு குறைந்து பகல் பெருகி வளருமாதலால் இளவேனிலால் குளிர் மறைய பூவுலகில் உஷ்ணம் நாளுக்கு நாள் அதிகமாகும். ஆதலால் பூமியெங்கும் மலர்ச்சி பொங்கி மரங்கள், செடிகள், கொடிகள் தழைத்து அவைகள் மலர்களைப் புஷ்பிக்கும் காலமாக மே மாதம் திகழ்கின்றது.

சுமார் 130 வருடங்களுக்கு முன், உரோமையிலே இருந்த சேசுசபை குருக்களிலே ஒருவர் மே மாதத்தில் பூமி வளம் பெற்று தன்னை பசுமையால் உடுத்தி தன்னை சிங்காரித்துக் கொள்ளும் அழகைப் பார்த்து அந்த மாதத்தில் தேவதாயை மகிமைப்படுத்தினாலென்ன என்று யோசித்தார். அர்ச். கன்னிமரியாயைக் குறித்து கிறீஸ்தவர்கள் ஒரு நாளில் திரிகால ஜெபமென்கிற மூன்று வேளையும், வாரத்தில் சனிக்கிழமையாகிய ஒரு தினத்தையும் கொண்டாடி வருகிறார்களே, இடைவிடாது கணக்கற்ற சகாயங்களைக் கிறீஸ்தவர்களுக்கும், மனுக்குலத்திற்கும் செய்து வரும் தேவதாய்க்கு நன்றியாக ஒரு மாதம் முழுவதும் திருநாள் கொண்டாடி அவர்களை மகிமைப்படுத்தினால் என்ன ? என்று சிந்தித்தார்.

தேவ இரகசிய ரோஜாவான பரம இராக்கினியான அர்ச். கன்னிமாமரி, தமது சுகிர்த புண்ணியம் என்னும் சுகந்தத்தால் மண்ணுலகையும், விண்ணுலகையும் பரிமளித்து வருகிறார்கள். பரம பிதாவின் திருமகளாக வளமையும், கிறீஸ்துவைப் பூரணமாக தமது உதரத்தில் தாங்கிய செழுமையும், இஸ்பிரீத்துசாந்துவால் நிரப்பப்பட்டக் கன்னிபூமியாக திகழ்ந்து உலகிற்கு இரட்சண்யமென்னும் சுகந்தத்தையும், விளைவையும் கொண்டு வந்த கன்னிமாமரிக்கு, அத்தகைய பண்புகளைக் கொண்டு வளங்கொழிக்கும் பூமியைக் கொண்டிலங்கும் ''மே மாதத்தை'' ஒப்புக்கொடுத்து, அம்மாதத்தில் அவர்களை மகிமைப்படுத்தினால் என்னவென்று சிந்தித்தார். அதன்படி மே மாதத்தில் தேவதாய்க்கு விசேஷ வணக்கத்தைத் தாம் செய்து வந்ததுமல்லாமல், கிறீஸ்தவர்களையும் அனுசரிக்கத் தூண்டினார். இந்த பக்திமுயற்சி சர்வேசுரனுக்கும், தேவதாய்க்கும் சந்தோஷம் வருவிக்கிறது என்பதற்கான அடையாளமாக இந்த பக்தியை அனுசரித்து வந்த கிறீஸ்தவர்களுக்கு பல விசேஷ உபகாரங்கள் கிடைக்கத் துவங்கவே, இப்பழக்கம் ரோமாபுரியிலிருந்து இத்தாலி, பிரான்ஸ், ஸ்பெயின் முதலிய ஐரோப்பிய நாடுகளெங்கும் பரவ ஆரம்பித்தது.

இதனால் கிறீஸ்தவர்கள் ஏராளமான ஞான நன்கைளை அடைவதைக் கண்ட 7-ம் பத்திநாதர் என்னும் பாப்பானவர் அம்முயற்சியை ஆசீர்வதித்து எல்லாக் கிறீஸ்தவர்களும் இப்பக்திமுயற்சியைக் கடைபிடிக்கவும், அதனை அனைத்து தேவாலயங்களிலே அனுசரிக்கவும் 1815-ல் அங்கீகாரம் வழங்கி பல்வேறு ஞானத் தனிபலன்களையும் மே மாதத்தில் விசுவாசிகள் தெரிந்து கொண்ட ஒரு நாளிலே ஒரு பரிபூரணப்பலனையும் வழங்கினார்.

இம்மாதத்தில் நம் தேவதாயின் சுருபத்தை, அலங்கரிக்கப்பட்ட பீடத்தின் மேல் வைத்து, திரி ஏற்றி, மலர்களை சூட்டி, அவர்களுக்கு மிகவும் பிரியமான ரோஜா மாலையாம் ஜெப மாலையை ஜெபித்து, அவர்களுடைய புண்ணியங்களையும், மகிமைகளையும் விவரிக்கும் பிரார்த்தனையைச் சொல்லி, அந்த ஞான அர்த்தங்கள் நிறைந்த பிரார்த்தனை வாக்கியங்களுக்கு விளக்கங்களை வாசிக்கக் கேட்டு, அதன் மூலமாக நம்முடைய தேவதாயின் மேல் உள்ள பக்தியில் உறுதியடைந்து வளர்வோமாக. அவர்களது அரவணைப்பில் வாழ்வோமாக.


**மகா வணக்கத்துக்குரிய கன்னிகையே**
**எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!**

# திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை

## அறிந்து கொள்வோம்!



[**கத்தோலிக்கத் திருச்சபையின் பொக்கிஷமான திரிதெந்தீன் திவ்விய பலிபூசை ஒருபோதும் தடைசெய்யப்படவில்லை. அது திருச்சபையில் நித்தியமாக நிறுவப்பட்டுள்ள மெய்யான கல்வாரி பலியாகும். இப்பூசையில் சிறந்த முறையில் பங்கேற்பது நமது விசுவாச வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கும். அதற்கு பூசையின் ஒவ்வொரு பகுதியையும், அதன் முக்கியத்துவத்தையும் விசுவாசிகள் அறிந்து கொள்வது அவசியம். அதற்கு இத்தொடர் உதவும். –** ஆசிரியர்]



விசுவாசிகளின் பாவசங்கீர்த்தனம்

**பூசை ஆரம்பம்** (தொடர்ச்சி)

**– பீடத்தினடியில் ஆயத்த செபங்கள் –**

(Prayers at the foot of the Altar)

– வெளியரங்க பாவசங்கீர்த்தனம் –

**(Confiteor)**

“நீங்கள் இராட்சியம் அடையும் பொருட்டு, ஒருவருக்கொருவர் உங்கள் பாவங்களைச் சங்கீர்த்தனம் பண்ணி, ஒருவரொருவருக்காக வேண்டிக்கொள்ளுங்கள்'' (இயாக. 5:16)

என்பதற்கேற்ப, குருவானவர் செய்த பாவசங்கீர்த்தன அறிக்கையைத் தொடர்ந்து பீடபரிசாரகர்கள் தலைகுனிந்து தங்களது பெயராலும், சகல விசுவாசிகளின் பெயராலும் பாவமன்னிப்பை வேண்டி, அதே ஜெபத்தை சொல்லி மன்றாடுகிறார்கள். விசுவாசிகளும் பூசைப்புத்தகத்தில் வாசித்து சர்வேசுரனிடத்தில் தனிப்பாவ அறிக்கை செய்வார்கள்.

‘‘**Confiteor Deo omnipotenti... சர்வத்துக்கும் வல்ல சர்வேசுரனிடத்திலும்...**'' என்று பாவசங்கீர்த்தன ஜெபத்தை தாழ்ச்சியோடு தலைகுனிந்து ஜெபித்து சகல அர்ச்சிஷ்டவர்களின் இராக்கினியான தேவதாயினுடையவும், மற்ற மோட்சவாசிகளுடைய மன்றாட்டுக்களாலும், குருவானவரின் பரிந்துரையாலும் பாவமாகிய மாசு கழுவப்பட்டவர்களாய் நிறைவேறப்போகும் பரிசுத்தப் பலியின் பலன்களில் பங்கடைய தகுதி பெறும்படியாக மன்றாடுகிறார்கள்.

அதற்கு குருவானவர் “...**Misereatur vestri omnipotens Deus... சர்வத்துக்கும் வல்ல சர்வேசுரன் உங்கள் மீது இரக்கங் கொண்டு உங்களுடைய பாவங்களை மன்னித்து உங்களை நித்திய ஜீவியத்திற்கு அழைத்து செல்வாராக...**'' என்று ஜெபித்து குருவானவர் விசுவாசிகளுக்காகப் பரிந்து பேசுகிறார். திடப்படுத்துகிறார். இதனால் ஆறுதலும், நம்பிக்கையும், மனச்சமாதானத்தையும் அடைந்து உள்ளம் நெகிழ்ந்தவர்களாக பீடப்பரிசாரகர்கள் **''ஆமென்''** என்று பதிலளித்து தலை நிமிர்கிறார்கள்.

பின்னர் குருவானவர் தமது குருத்துவ அதிகாரத்தினால் பாவமன்னிப்பு ஆசீர்வாதத்தை சிலுவை அடையாளம் வரைந்து வழங்குகிறார். அப்போது அவர் “...**Indulgentiam '+' absolutioem, et ... சர்வ வல்லபரும் தயாபரருமான சர்வேசுரன் நமது பாவங்களுக்கு மன்னிப்பையும், பொறுத்தலையும், விமோசனத்தையும் நமக்கு அளிப்பாராக**'' என்று ஜெபித்து ஆசீரளிக்கிறார்.

**குறிப்பு:** குருவானவரின் இந்த ஜெபத்தால் கிடைக்கும் பொறுத்தலானது, தேவதிரவிய அனுமான பொறுத்தல் ஆசீர்வாதமாயிராமல் **(absolutio sacramentalis)** வெறும் பரிந்துரைக்கும் ஜெபமாகவும், சர்வேசுரன் தமது மக்களின் பாவங்களை மன்னிக்கும்படி விண்ணப்பிக்கும் பொறுத்தலாகவும் **(absolutio)** தான் இருக்கிறது. அதாவது, தேவதிரவிய அனுமானத்தை மனஸ்தாபப்படுகிறவர்கள் பெற்றுக்கொள்ள தகுதியாக்கும் ஜெபமாகத்தான் இது அமைகிறது.

## முடிவுச் செபங்கள்


அதன் பிறகு குருவானவர் பலி நிறைவேற்ற பீடமேறத் தயாராகிறார். ஆனாலும் அவர் தமது தகுதியின்மையை உணர்ந்து சஞ்சலப்படுகிறார். அப்பொழுது இரண்டு ஜெபங்களை மவுனமாகச் செபிக்கிறார். முதல் ஜெபம்: **"Aufer a Nobis"** - குரு பீடத்தி லேறும் போதும்; இரண்டாவது ஜெபம்: **"Oramus te"** - பீடத்தை அடைந்த பின்பும் ஜெபிக்கப்படுகின்றன. இச்செபங்களை குரு விசேஷமாக தமக்காக, பரிசுத்த பலி நிறைவேற்ற தகுதியாக்கும்படியாகவும், தமது இருதயத்தை தூயதாகவும், சுத்தமானதாகவும் ஆக்கும்படியாக மன்றாடுகிறார். அதற்கு முன்பாக தமது பாவ சார்பு தம்மை விட்டு முழுமையாக மறையவில்லையே என்று அங்கலாய்த்து 84-ம் சங்கீதத்தை மனஸ்தாப உள்ளத்தோடு உச்சரிக்கிறார். இது பாவப்பொறுத்தலுக்கு பின்பு சொல்லப்படுவதாதலால் குரு தலையை சற்றே குனிந்து மிகுந்த நம்பிக்கையோடும், பக்தி வணக்கத்தோடும் கீழ்க்கண்ட ஜெபங்களைச் ஜெபிக்கிறார்.

| ஜெபம் | வியாக்கியானம் |
| --- | --- |
| **குரு: "Deus tu conversus vivificabis nos... சர்வேசுரா, தேவரீர் எங்கள் பாரிசமாய்த் திரும்பி எங்களை உயிர்ப்பித்தருளும்.** | **(1)** நாம் பாவம் செய்யும்போது, சர்வேசுரன் அருவருப்படைந்து நம்மிடமிருந்து தமது திருமுகத்தைத் திருப்பிக்கொள்கிறார். ஆனால் நாம் நமது பாவங்களையும், குற்றங்களையும் ஏற்றுக் கொண்டு மனஸ்தாபப்படும் போது நமது பக்கமாய்த் திரும்பி தமது வரப்பிரசாதங்களையும், இரக்கத்தையும் வழங்குகிறார். உயிரளிப்பவரான அவரிடமிருந்தே மகிழ்ச்சியும், திடத்தையும், புது ஜீவியத்தையும் அடைகிறோம். |
| **பரிசாரகர்: "Et plebs tua laetabitur in te... உமது ஜனமும் உம்மிடம் மகிழ்ந்து கொள்ளும்.** | **(2)** மீண்டும் முழு ஐக்கியத்தையும், அதிக வரப்பிரசாதங்களையும் சர்வேசுரனிடமிருந்து பெற்ற பின் அவரில் மகிழ்ச்சியும், சமாதான மும் அடைகிறோம். இது மீட்பரும், சர்வேசுரனுமானவரிடத்தில் அகமகிழ்வைத் தருகிறது. |
| **குரு: "Ostende nobis , Domine, misericordiam tuam... ஆண்டவரே உமது இரக்கத்தை எங்களுக்கு காண்பியும்.** | எதிர்கால மகிமைக்கும், விண்ணக வாழ்வில் நாம் அடைய விருக்கும் உரைக்கவியலாத மகிழ்ச்சியோடு ஒப்பிடும்போது இப்போது நாம் கொண்டிருக்கும் மகிழ்ச்சியானது நிறைவானதாகவும், முழுமையானதாகவும் இல்லை. ஏனெனில் விண்ணக வாழ்வில் நாம் அடையவிருக்கும் "மகிழ்ச்சி நிறைவாகவும், நம்மிடமிருந்து யாரும் எடுத்துவிட முடியாததாகவும் இருக்கிறது." (அரு. 17:13) |
| **பரிசாரகர்: "Et salutare tuum da nobis... உமது இரட்சண்யத்தையும் எங்களுக்குத் தாரும்.** | **(3)** இந்த மகிழ்ச்சியின் முடிவை நாம் அடைய, நமதாண்டவர் தமது இரக்கத்தை நமக்கு அருளும்படியாகவும், நம்மை வழி நடத்தும்படியாகவும் மன்றாடுகிறோம். |
| | **(4)** அதோடு எங்களது இரட்சண்யமாகிய எங்கள் ஒளியும், ஜீவியமுமாயிருக்கிற சேசு கிறீஸ்துவை அனுப்பியருளும் என்று மன்றாடுகிறோம். |
| **குரு: "Domine, exaudi orationem meum... ஆண்டவரே என் மன்றாட்டைக் கேட்டருளும்.** | **(5)** சர்வேசுரனிடமிருந்தும், இரட்சகரிடமிருந்தும் இந்த இரட்சண்யமாகிய வாக்குத்தத்தத்தை அடைந்து கொள்ள, பழைய ஏற்பாட்டின் புனிதர்கள்..."தூரத்தில் கண்டு வாழ்த்தி ஆவலாய் இருந்தனர்" (எபிரே. 11:13). ஆனால் திருச்சபையினுடைய மக்கள் மிகவும் பேறுபெற்றவர்களும், மகிழ்ச்சி நிறைந்தவர்களுமாய் இருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் தினமும் ஆண்டவருடைய பீடத்திற்கு விரைந்து வரவும், அங்கே முடிவில்லாத விதமாய், சுரந்தோடும் மீட்பரின் ஜீவியமளிக்கும் நீரூற்றை வேண்டிய மட்டும் உள்ளம் நிறையப் பருகும் பாக்கியம் பெற்றவர்கள். |
| **பரிசாரகர்: "Et clamor meus ad te veniat... என் கூக்குரல் உம்முடைய சன்னதி மட்டும் வரக்கடவது."** | |

என்று குருவானவர் முதலில் ஜெபத்தைச் சொல்ல, பீட பரிசாரகர்கள் பதிலுக்கு சங்கீதத்தைச் சொல்லி மன்றாடுகிறார்கள். பின்னர் குரு பீடத்தினடியில் இரு முடிவு ஜெபங்களை ஜெபிக்கத் துவங்கும் முன்பாக..."Dominus vobiscum... ஆண்டவர் உங்களோடு இருப்பாராக" என்று முகமன் கூறி தன்னைத் தேற்றி ஆயத்தப்படுத்துகிறார். அதற்கு பீடபரிசாரகர்கள் இவ்வாறு பதிலளிக்கிறார்கள்.

(தொடரும்)

# திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவரின் வரங்கள்




**"திவ்விய இஸ்பிரீத்துசாந்துவே எழுந்தருளி வாரும். உமது விசுவாசிகளின் இருதயங்களை நிரப்பும். அவைகளில் உமது சிநேகத்தின் அக்கினியை மூட்டியருளும்"**

**(இஸ்பிரீத்துசாந்து திருநாள் பூசை – கீதம்)**

தாயாகிய திருச்சபை தமது மக்கள் திவ்விய இஸ்பிரீத்து சாந்துவானவரின் கொடைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று ஆசிக்கிறது. அதற்காக நம்மைத் தயாரிக்க அழைக்கிறது. இஸ்பிரீத்துசாந்துவானவரின் வரங்களைப் பெற நாம் நம்மையே தயாரிக்க வேண்டும். அன்று அப்போஸ்தலர்கள் "எல்லோரும் ஸ்திரீகளோடும் சேசுவின் தாயாராகிய மரியம்மாளோடும் அவருடைய சகோதரரோடும் ஒரே மனமாய் ஜெபத்தில் நிலைத்திருந்தார்கள்" (அப். நட. 1:14). அது போல திருச்சபையோடு அதன் மக்களாகிய நாம் "சேசுவின் தாயாராகிய மரியம்மாளோடு" ஜெபத்தில் நிலைத்திருக்க வேண்டும். அப்போது தான் இஸ்பிரீத்து சாந்துவானவரை முழுமையாக அடைந்துகொள்வோம். அவரது வரங்களை அபரிமிதமாகப் பெற்றுக்கொள்வோம்.

### இஸ்பிரீத்துசாந்துவானவரின் வரங்கள்

திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவர் தரும் ஏழு தெய்வீக வரங்களைப் பற்றி பார்ப்போம்.

**(1) ஞானம்:** இவ்வரம் சர்வேசுரனையும், அவருக்கடுத்த காரியங்களையும் நன்றாய் அறியும்படியாகவும் அவற்றை மதிக்கும் படியாகவும் நமக்கு உதவி செய்ய அருளப்படுகிறது. இவ்வரத்தின் மூலம் நாம் சர்வேசுரனால் அறிவிக்கப்பட்ட சத்தியங்களை ஆவலோடு தேடி அவைகளை சுகித்து வருகிறோம். ஞானம் என்ற வரம் இவ்வுலகின் வெறுமையை - ஒன்றுமில்லாமையை நமக்கு உணர்த்துகிறது. இவ்வரம் இல்லாவிட்டால் ஞானக்காரியங்களில் ஆர்வமற்று குளிர்ந்தவர்களாகி விடுவோம்.

**(2) புத்தி:** இவ்வரம் வேதசத்தியங்களையும் பரம இரகசியங்களையும் முதலாய் அதிகமதிகமாய்க் கண்டுபிடிக்க செய்யும் வரமாகும். இவ்வரத்தால் சில சமயங்களில் நமது புத்தியில் ஒரு ஞான வெளிச்சம் உண்டாகி, அதைக்கொண்டு, நாம் உணராது வாசித்த ஒரு வேதசத்தியத்தை அல்லது வேத வாக்கியத்தை திடீரென உணர்ந்து அதில் உருக்கமடைகிறோம். இவ்வரத்தின் மூலமாக தவறான பதிதப் போதனைகளை எளிதாகக் கண்டு அவற்றை விலக்குகிறோம்.

**(3) அறிவு:** அறிவு என்ற இவ்வரம் சர்வேசுரன் இவ்வுலகக் காரியங்களை அறிந்து மதிக்கிறது போல, நாமும் அவைகளை மதிக்கச் செய்கிறது. இவ்வரத்தின் மூலம், சர்வேசுரன் மோட்ச மடைவதற்கு மட்டுமே நம்மைப் படைத்தாரென்றும், அதை அடைய வேண்டிய வழிகள் இன்னதென்றும், அவற்றிற்கு ஏற்படக்கூடிய தடைகள் எவை என்பதை தெளிவாய் கண்டுணருகிறோம்.

**(4) விமரிசை:** சர்வேசுரனுடைய தோத்திரத்திற்கும், நம்முடையவும், பிறருடையவும் ஆத்தும இரட்சண்யத்திற்கு எந்த நேரத்தில், எந்த இடத்தில், எந்த சூழ்நிலையில் எதைச் செய்வது என்று காட்டும் ஞான வெளிச்சமே விமரிசை என்ற வரமாகும். இவ்வரத்தினால் மிதமிஞ்சின நம்பிக்கைக்கும், தீவிரத்துக்கும், யோசியாமைக்கும், பசாசின் உபாயங்களுக்கும் தப்பித்துக் கொள் கிறோம். உள்ளார்ந்த ஏவுதல் வருவது பசாசிடமிருந்தா அல்லது நல்ல சம்மனசிடமிருந்தா என்பதைப் பகுத்தறிகிறோம்.

**(5) திடம்:** நம் வாழ்வில் கஷ்டங்களும், விக்கினங்களும் நேரிடும் சமயத்தில், நாம் ஆண்டவரின் சித்தத்தின்படி நடக்க வேண்டிய தைரியத்தை நமக்கு கொடுக்கும் வரம் இதுவாகும். இவ்வரத்தினால் பசாசின் சோதனைகளையும், சகல தடைகளையும் ஜெயித்து, நமது கடமைகளை நன்கு நிறைவேற்றி வருவதற்கு மட்டுமல்லாமல், வேதத்திற்காக நமது உயிரை முதலாய் கொடுக்க அஞ்ச மாட்டோம்.

**(6) பக்தி:** பக்தியென்னும் வரமாவது, சர்வேசுரனையும் வேதத்திற்கு அடுத்தவைகளையும் தக்க மேரை மரியாதையோடு சங்கிக்கச் செய்யும் வரமாகும். இந்த வரத்தின் உதவியால், சர்வேசுரனை பிள்ளைக்குரிய நேசத்துடன் சிநேகிக்கிறோம்.

**(7) தெய்வபயம்:** தெய்வீக சமூகத்தில் தக்க வணக்கத் தோடு நம்மை நடக்கச் செய்து, பாவத்தினால் சர்வேசுரனுடைய மனதைப் புண்படுத்தாமல் அவருக்கு அஞ்சி நடக்கத் தூண்டும் வரமே தெய்வபயம் என்ற வரமாகும். பாவத்தை, அனைத்து தீமைகளிலும் பெரும் தீமையாகக் கருதி, மனிதன் மேல் உள்ள பயத்தையும், முகத்தாட்சண்யத்தையும் முறியடிக்குமாறு நம்மை ஊக்குவிக்கிறது. இவ்வரத்தினால் அற்ப பாவம் முதலாய் செய்ய அஞ்சுகிறோம்.

# பிரதான மந்திரங்களின் வியாக்கியானம்

**விசுவாசிகள் பயனடையும்படியாக இங்கே பிரதான மந்திரங்களுடைய விளக்கங்கள் தரப்படுகின்றன –** (ஆசிரியர்)

## அர்ச்சிஷ்ட சிலுவை மந்திரம்

**பிதாவுடையவும் சுதனுடையவும், இஸ்பிரீத்துசாந்துடையவும் நாமத்தினாலே** என்கிற வார்த்தைகள் முக்கியமும், அவசியமுமாயிருக்கின்றன. இந்த வார்த்தைகளைச் சரியாக உச்சரித்து, அர்ச். சிலுவை அடையாளம் வரைந்தால், ஐம்பது நாள் பலனும், தீர்த்தத்தோடு சிலுவை வரைந்து சொன்னால், நூறு நாள் பலனும் உண்டு. – ஞானஸ்நானம் கொடுக்கும்போது, இப்போது சொன்ன வார்த்தைகளைச் சரியாக உச்சரிக்காமல் மாற்றினால் அது ஞானஸ்நானமாகாது. ஆகையால் சிலுவை வரையும்பொழுது ''பிதாவுக்கும், சுதனுக்கும்''...மற்றதும் சொல்லாமல், ''பிதாவுடையவும், சுதனுடையவும், இஸ்பிரீத்துசாந்துடையவும், நாமத்தினாலே'' என்று அவசியமாய்ச் சொல்லவேண்டியது.

**ஆமென் சேசு. –** சர்வேசுரன் தமது திவ்விய குமாரனாகிய சேசுநாதருடைய திருநாமத்தைக் குறித்து, நாம் கேட்கிறதெல்லாம் கொடுப்பாரென்கிற உறுதியான நம்பிக்கையைக் காண்பிக்கிறதற்காக, ''**ஆமென் சேசு**'' என்று சொல்லி வேண்டிக்கொள்கிறோம்.

## பரலோக மந்திரம்

இது சேசுநாதர் சுவாமியே தம்முடைய சீஷர்களுக்கு படிப்பித்த மந்திரமாகும். இதில் சர்வேசுரனுக்கு தோத்திரமாக மூன்று மன்றாட்டுகளும், நமது தேவைகளுக்காக நான்கு மன்றாட்டுகளும், ஆக ஏழு மன்றாட்டுகள் அடங்கியுள்ளன. முதலாவது பகுதியில், 1–ம் மன்றாட்டாக சகல மனிதர்களும் சர்வேசுரனை அறிந்து ஸ்துதிக்கவும், 2–ம் மன்றாட்டாக சகல மனிதர்களும் அவரை சிநேகித்து இஷ்டப்பிரசாதத்தை அடையவும், 3–ம் மன்றாட்டாக சகலரும் உத்தமவிதமாய் அவரை சேவிக்கவும் வேண்டுமென்று கேட்கிறோம். இரண்டாவது பகுதியில், 1–ம் மன்றாட்டாக இப்பொழுது நடக்கிற இந்தக் காலத்திலே நமது ஆத்தும சரீரத்திற்கு வேண்டிய சகல நன்மைகளையும், 2–ம் மன்றாட்டாக கடந்த காலத்திலே நாம் கட்டிக்கொண்ட சகல பாவங்களுக்கு மன்னிப்பையும், 3–ம், 4–ம் மன்றாட்டுகளாக இனி வரும் காலத்தில் நம்மை சகல பாவத்தினின்றும், நமது ஈடேற்றத்திற்கு தடையாகிய சகல துன்பதுரித பொல்லாப்புக்களினின்றும், நம்மைக் காப்பாற்ற வேண்டுமென்றும் பிரார்த்திக்கின்றோம்.

### பரலோக மந்திரத்தின் வியாக்கியானம்

**பரலோகத்திலிருக்கிற:–** சர்வேசுரன் எங்குமிருந்தாலும், தமது மகிமைப் பிரதாபத்தை மோட்சத்தில் விசேஷமாய் விளங்கப்பண்ணி, தேவதரிசனத்தையும், ஆனந்த சந்தோஷத்தையும், முத்திப்பேறு பெற்றவர்களுக்கு தந்தருளுகிறார்.

**எங்கள் பிதாவே:–** சர்வேசுரன் தமது சாயலாக நம்மை உண்டாக்கிக் காப்பாற்றி, நமது சகோதரராகிய சேசுநாதர்சுவாமியின் நிமித்தம் நம்மைத் தமக்கு சுவீகாரப்பிள்ளைகளாக்கி, நமக்குத் தம்முடைய மோட்ச இராச்சியத்தை கொடுக்கச் சித்தமாயிருக்கிறதினாலே, **அவர் நமக்குத் தந்தையாய் இருக்கிறார்.**

மோட்சம் நமது சொந்த தேசமானதால், இவ்வுலகத்தில் பரதேசி களைப் போல் இருக்கிறோம். சகல மனிதர்களும் சர்வேசுரனுடைய பிள்ளைகளாயும் **தங்களுக்குள்ளே சகோதரர்களாக இருக்கிறார்க ளென்றும்,** இவர்கள் ஒருவருக்கொருவருக்காக வேண்டிக்கொள்ள வேண்டும் என்றும், இந்த ஜெபத்தினால் அறிகிறோம்.

ஆகையால்தான் ''என் பிதாவே'' என்று சொல்லாமல், ''எங்கள் பிதாவே'' என்ற சொல்லுகிறோம்.

(தொடரும்)

# தேவ அன்னைக்கு ஓர் புகழ்மாலை!

**(கத்தோலிக்கத் திருச்சபை தேவமாதாவை அவர்களுடைய மகிமை பெருமைகளை, புண்ணியங்களை, அவர்களைப் பற்றிய சத்தியங்களைப் பலவாறு புகழ்ந்துரைக்கின்றது. அவற்றினுடைய ஒரு வெளிப்பாடுதான் தேவமாதாவின் பிரார்த்தனை ஆகும். இது 52 அடைமொழிகளால் மாதாவைப் போற்றிப் பாடுகிறது. இவை மாதாவின் மகிமைகளின் இரத்தினச் சுருக்கம் என்றும் கூறலாம். இவைகளை அறிவது மாதாவின் பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியைத் தரும். இப்பகுதியில் மாதா பிரார்த்தனையின் விளக்கம் மாதந்தோறும் வெளியிடப்படும் – ஆசிரியர்)**

## (1) அர்ச்சிஷ்ட மரியாயே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

கடவுளின் தாயான கன்னிமரியம்மாள் "பிரியதத்தத்தினால் பூரணமான" மகா பரிசுத்த பாக்கியவதி. ஏனெனில் அவர்கள் தேவ அருளால் நிறைந்தவர்கள். "மரியா" - என்ற அவர்களது பரிசுத்த நாமத்திற்கு திருச்சபையின் வேதபாரகர்கள் 'சமுத்திரத்தின் நட்சத்திரம்', 'உயர்த்தப்பட்டவள்', 'வல்லமையுடையவள்', 'சத்துவமுள்ளவள்', 'பிரகாச மானவள்', 'அன்புள்ளவள்', 'ஆண்டவள்', 'மகா அழகுள்ளவள்' என பலவாறான அர்த்தங்களைத் தருகிறார்கள். அவையனைத்தும் தேவமாதாவுக்கு மிக அருமையாகப் பொருந்தி வருவதைக் காணலாம்.

ஆனால் சில ஞான ஆசிரியர்களோ "Maria" என்ற வார்த்தை 'கசப்பு' (bitter) என்று பொருள் தரும் "Mara" என்ற ஹீப்ரு (Hebrew) மொழி சொல்லிலிருந்து வந்தது என்று கூறுகிறார்கள். இதனைச் சற்று ஆராய்ந்தால் இதுவும் மாதாவுக்குப் பொருந்துவதைக் காணலாம். எவ்வாறெனில், இசையாஸ் தீர்க்கதரிசி குறிப்பிடும் "துன்புற்ற மனிதனாகிய" (இசை. 53:3) சேசுவின் தாயாரும் இப்படிக் "கசப்பு" நிறைந்தவர்களாக இருக்கிறார்கள் என்று கூறுவது சரியே!

இதனை இன்னும் சற்று கவனமாக ஆராய்ந்தால், தேவதாய் வியாகுலமாகிய கசப்பை ஏற்றுக்கொண்டு. மனுக்குலத்திற்கு இரட்சண்யம் கொண்டுவந்த இரட்சகர் சேசுவோடு இணை இரட்சகியாக "துன்புற்றவர்களாக" திகழ்ந்ததைச் சுட்டிக் காட்டுவதாக இந்த நாமம் இருக்கிறது.



**"மரியாய்" என்னும் நாமத்தின் வல்லமை :** மரியாய் என்னும் பரிசுத்த நாமம் மிகுந்த வல்லமையுடையது, ஏனெனில் அர்ச். தமியான் இராயப்பர் உரைப்பது போல், "மரியாய் என்னும் நாமம் சர்வேசுரனுடைய தெய்வீக கருவூலத்திலிருந்து வந்தது." அதனை "உச்சரிக்கும் போதெல்லாம் விண்ணகம் ஆர்ப்பரிக்கிறது, மண்ணகம் அக்களிக்கிறது, சம்மனசுக்கள் இன்னிசை பாடுகிறார்கள்" என்று கூறுகிறார் அர்ச். பெர்னார்டு. மரியாய் என்னும் நாமத்திற்கு பசாசுகள் நடுநடுங்குகின்றன. இதைப்பற்றிதான், தாமஸ் அ கெம்பிஸ் என்பவர் "ஓ மரியாயே, உமது நாமம் உண்மையிலேயே மகிமையானது, ஆச்சரியப் படத்தக்கது; அதனை மரணத் தருவாயில் இருப்பவர் உச்சரித்தால், நரகத்தின் கூளிகளுக்கு அஞ்சத் தேவையில்லை" என்று போற்றுகிறார்.

திருச்சபையும் மரியாயின் திருநாமத்தை திருநாளாக அனுசரித்து வருகிறது. 1683-ம் ஆண்டில் வியன்னா நகரில் முகம்மதியருக்கு எதிரான போரில் மாதாவின் உதவியால் கிறீஸ்தவர்கள் அடைந்த வெற்றியைக் கொண்டாடும்படியாக பாப்பரசர் 11-ம் இன்னோசென்ட் 1685-ல் மரியாயின் நாமத்திருநாளை ஏற்படுத்தினார். அதன்படி மரியாயின் நாமத்தின் திருநாள் செப்டம்பர் 12-ம் நாளன்று திருச்சபையெங்கும் கொண்டாடப்படுகிறது. நாமும் நமது அன்னையின் நாமத்தைப் போற்றுவோம்.

**அர்ச். மரியாயே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**

# நிறைவேறிவரும் தீர்க்கதரிசனங்கள்

உலகிற்கும், மனுக்குலத்திற்கும் அடுத்து வரும் தீமைகளையும், அதனால் வரும் தேவ நீதியின் தண்டனைகளையும் வேதாகமங்களில் காண்கிறோம். பழைய ஏற்பாட்டில் இசையாஸ் தீர்க்கதரிசியிலிருந்து, புதிய ஏற்பாட்டில் அர்ச். இராயப்பர், சின்னப்பர் ஆகிய அப்போஸ்தலர்களால் வெளிப்படுத்தப்பட்ட தீர்க்கதரிசனங்களையும், எச்சரிப்புகளையும் காணலாம். (காண்க: II தீமோத்தேயு 4 : 3 ,4; II தீமோ. 3 : 1 - 6 ; இராய. 3 : 3 போன்றவை) அதே போன்று திருச்சபையின் வரலாற்றில் அவ்வப்போது அடுத்து வரும் கேடுகளை பரிசுத்த ஆன்மாக்கள் மூலமாக நமது மீட்பரும், தேவமாதாவும் முன்னறிவித்து எச்சரித்து வருவதை அறிவோம். அவற்றுள் மிகவும் கடுமையானதும், திகைக்க வைப்பதுமானவை 16-ம் நூற்றாண்டைச் சேர்ந்த வண. மரியன்னா தாயாருக்கு நமதாண்டவரும், மாதாவும் வெளிப்படுத்திய தீர்க்கதரிசனங்களாகும். நாம் வாழும் இக்காலத்தில் உலகிலும், சத்திய திருச்சபையிலும் நிகழ்ந்து வரும் கடவுள் மறுப்பு, தேவ அவசங்கைகள், நவீனத்தால் திருவழிப்பாட்டில், குருத்துவத்தில் - துறவற வாழ்வில் - கிறீஸ்தவ வாழ்வில் ஏற்பட்டு வரும் அலங்கோலங்களும், நாசமும், அதனால் ஏற்படும் ஆன்ம இழப்புகளும் 350 ஆண்டுகளுக்கு முன்பே இக்கன்னிகைக்கு அறிவிக்கப்பட்டன!! அவைகளுக்காக தன்னையே பலியாக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டாள். விசுவாசிகள் இந்த தீர்க்கதரிசனங்களை அறிந்து கொள்வது அவர்களுக்கு நன்மை பயக்கும். விசுவாசத்தில் இன்னும் உறுதிப்பட்டு திருச்சபைக்காக ஜெபிக்கத் தூண்டும் - ஆசிரியர்.

### வண. மரியானா தாயாரின் வாழ்க்கைச் சுருக்கம்!

1563-ம் ஆண்டில் ஸ்பெயின் நாட்டின் பிஸ்காய் பகுதியில் பிறந்த வண. மரியானா தே சேசுவின் தோரஸ் தாயார் தமது 13-வது வயதில் "ஏழை கிளாரம்மாளின் அமல உற்பவத்தின் சபை"யில் உட்பட்டாள். ஸ்பெயின் நாட்டின் குடியேற்ற பகுதியான ஈக்வேடார் நாட்டின் க்விட்டோ நகரில் தமது சபையின் (ராயல் கன்னியர் மடம்) புதிய இல்லத்தை நிறுவுவதற்காக சில சகோதரிகளுடன் கப்பலில் பயணமானாள். புதிய மடம் அமைப்பதை சகிக்காத சாத்தான் சகோதரிகள் பயணித்து வந்த கப்பலையே மூழ்கடித்திட முனைந்தது. சாத்தான் 7 தலை கொண்ட பாம்பு வடிவில் கடலில் தோன்றி கப்பலைத் தாக்க வருவதையும், உடனே தேவபாலனை ஏந்தியவர்களாக தேவதாய் தோன்றி அதனை முறியடிப்பதையும் காட்சியில் கண்டாள். தாம் மடம் அமைப்பது, தேவபராமரிப்பின் சித்தம் என்றும், அது காப்பாற்றப்படுமென்றும் அறிந்து திடங்கொண்டாள்.



வண. மரியானா தாயார்

தமது அத்தையான சங். மரிய தே தாபோதா தாயாரின் வழிக்காட்டுதலினால் பரிசுத்த, புண்ணிய ஜீவியத்தில் வளர்ந்த மரியானா 1579-ல் துறவற வார்த்தைப்பாடுகள் கொடுத்து ஜெப தப முயற்சிகளில் ஈடுபட்டு வந்தாள். பல பரலோக காட்சிகளும், சலுகைகளும் அவளுக்கு அருளப்பட்டன. கடினமான எதிர்ப்புகளையும், துன்பங்களையும் சகித்து சபையின் வளர்ச்சிக்காக பாடுபட்ட மரியானா மடத்தின் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாள். அவளுக்கு எதிர்ப்புகள் மடத்தின் உள்ளேயிருந்தும், வெளியிலிருந்தும் எவ்வளவுக்கு வந்ததென்றால், அவள் அநியாயமான சிறைத்தண்டனையும் பெறவேண்டி வந்தது! 1599 ஜனவரி 16-ல் இருந்து தேவதாய் **நன்வெற்றி மாதாவாக** (Our Lady of Good Success) தன்னை அறிவித்து பல எச்சரிப்புகளையும், தீர்க்கதரிசனங்களையும் வழங்கினார்கள். அவற்றில் 19-ம் நூற்றாண்டின் இறுதி, மற்றும் 20-ம் நூற்றாண்டு முழுவதிலும் சாத்தானின் இரகசிய சபையைக் கருவியாகக்கொண்டு சாத்தான் உலகம் முழுவதையும் ஆட்சி செய்வான். விசுவாச மறுப்பு, துறவியர், கன்னியரின் துர்மாதிரிகையான வாழ்வு, தேவ வழிபாட்டிலும், குருத்துவத்திலும், தேவதிரவிய அனுமானங்களைப் பயனற்றவையாக்குதல் போன்றவற்றால் திருச்சபை துன்பத்தை அனுபவிக்கும் என்பன போன்ற பல தீர்க்கதரிசனங்களை வெளிப்படுத்தினார்கள். இவற்றிற்காக தன்னையே பலியாக்கி ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள்.

அசாதாரண, சுபாவத்திற்கு மேலான வாழ்வு வாழ்ந்த மரியானா தாயார் 1635-ம் வருடம், ஜனவரி 16-ம் நாள் பாக்கியமான மரணம் அடைந்தாள். அவள் பெற்றுக்கொண்ட நன்வெற்றி மாதாவின் (Our Lady of Good Success) காட்சிகளும், செய்திகளும் 17-ம் நூற்றாண்டிலேயே மேற்றிராசனத்தின் அங்கீகாரத்தைப் பெற்றன! சபைத்தலைவியின் உத்தரவினால் மரியானா தமது வாழ்வின் சம்பவங்களையும், செய்திகளையும் எழுதி வைத்துள்ள குறிப்புகள் இன்றும் சபையின் ஆவணக் காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. 1906-ம் வருடம் மடத்தைப் புதுப்பிக்கும் வேலை நடந்த போது மூன்று நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த தாயாரின் கல்லறை திறக்கப்பட்டது. அதிலே மரியானா தாயாரின் சரீரம் உடுத்தப்பட்ட சபை உடுப்புகளுடனும், அருகில் வைக்கப்பட்டிருந்த தவக்கருவிகளுடனும் புதுமையாக அழியாமலிருந்தன! சரீரத்தில் இருந்து பரலோக நறுமணம் வீசிக்கொண்டிருந்தது.

திருச்சபை மரியானா தாயாருக்கு "**வணக்கத்துக்குரிய**" என்ற பட்டத்தை வழங்கி, அவளது புனித பட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்துகொண்டிருக்கிறது.

## நன்வெற்றி மாதாவின் (Our Lady of Good Success) செய்திகளும் தீர்க்கத்தரிசனங்களும்!

1599-ம் வருடம் ஜனவரி 16-ம் நாளிலிருந்து தேவமாதா **நன்வெற்றி மாதாவாக** (Our Lady of Good Success) தோன்றி வழங்கிய செய்திகளும், தீர்க்கத்தரிசனங்களும் கீழே தரப்படுகின்றன:

### அறிவுரைகளும், புத்திமதிகளும்!

**தேவமாதா:** "ஓ, மனுக்குலமும், துறவியரும் மோட்சம் என்பது என்ன, சர்வேசுரனைக் கொண்டிருப்பது எத்தகையது என்பதை மட்டும் அறிந்திருப்பார்களேயானால், எவ்வளவு வித்தியாசமான வாழ்வு வாழ்ந்திருப்பார்கள்! இன்னும் முழுமையாக சர்வேசுரனைக் கொண்டிருக்க தங்கள் வாழ்வில் வரும் ஒரு ஒறுத்தல் முயற்சியை யும்கூட தவறவிட மாட்டார்கள். ஆனால் சில உலகப் புகழ்ச்சி, மனித உயர்வு என்ற தவறான கவர்ச்சியில் மயங்கி தங்களையே இழந்து விடுகிறார்கள். வேறு சிலரோ சுய நேசத்தால் குருடராகி ஞான வெதுவெதுப்பு என்னும் மாபெரும் தீமையில் விழுந்து விடுகிறார்கள். இத்தகைய ஞான வெதுவெதுப்பே துறவற மடங்களில் துறவியரின் பக்தியார்வத்தையும், தாழ்ச்சியையும், தன்னையே இழத்தல், துறவற புண்ணியங்களை ஆர்வத்தோடு அனுசரித்தல் மற்றும் பிறர்சிநேகம் ஆகியவற்றையும் அழித்து விடுகின்றது. எனது தெய்வீக குமாரனுக்கும், தாயாகிய எனக்கும் மிகவும் பிரியமுள்ளவர்களாக்கும் "குழந்தைக்குரிய எளிமை" என்ற புண்ணியத்தை அகற்றி விடுகிறது.

"ஆண்டவருடைய செயல்கள் எத்துணை வியப்புக்குரியன!" என்ற தாவீது அரசருடைய வார்த்தைகளை நினைவு கூறுவாயாக. இந்த உண்மையை ஏற்றுக்கொள். இப்போது மடத்திலிருக்கும் மற்றும் இனி வரப்போகும் உன் மகள்களுக்கு அவர்கள் தங்கள் தெய்வீக அழைத்தலை நேசிக்கும்படியாக கற்றுக்கொடுத்து அவர்கள் மனதில் பதியச் செய். எங்களுக்கு சொந்தமானவர் களும், வாரிசுகளுமான அவர்களுக்காக சர்வேசுரனும், நானும் மகிமை மிக்க இடத்தை ஆயத்தம் செய்திருக்கிறோம் என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்து.

"துறவற மடங்களும், கன்னியர் இல்லங்களும் இல்லாத உலகிற்கு ஐயோ கேடு! மனிதர்கள் இவற்றின் முக்கியத்துவத்தை கண்டுணராமல் இருக்கிறார்கள். இதையறிந்திருந்தால், துறவற மடங்களை தங்களாலானமட்டும் பல மடங்கு அதிகரிக்கச் செய்து இருப்பார்கள். ஏனெனில் கற்பொழுக்கத்திற்கு எதிராக உலகில் நிகழும் தீமைகளுக்கான பரிகாரம் இந்த துறவற மடங்களில் மட்டுமே நடைபெற முடியும். ஆத்துமங்களின் இரட்சண்யமும், பெரும் பாவிகளின் மனந்திரும்புதலும், பெரும் கொள்ளை நோய் மற்றும் போர்களின் நிறுத்தமும், நிலத்தின் வளமையும் (செழிப்பு), நாடுகளுக்கிடையே நல்லுறவும் எங்கிருந்து வருகின்றன என்பதை உலகம் அறியாது. **துறவற மடங்கள் மற்றும் கன்னியர் மடங்களிலிருந்து மோட்சத்தை நோக்கி எழும்பும் ஜெபங்களில் இருந்து தான் இவை வருகின்றன.**

" ஓ! அழியக்கூடிய மனிதர்கள் மட்டும் இவ்வுலகில் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரத்தை எவ்வளவு பாராட்டி பயன்படுத்த வேண்டும் என்று அறிந்து, அதன்படி தங்கள் ஜீவியத்தின் ஒவ்வொரு கனப்பொழுதையும் பயன்படுத்துவார்களேயானால், இந்த உலகம் எவ்வளவு வித்தியாசமாக இருந்திருக்கும்! கனிசமான ஆன்மாக்கள் நித்திய கேட்டிலிருந்து தப்பியிருப்பார்கள்! **ஆனால் காலத்தை பயனுள்ள வகையில் செலவிடாததே, அவர்களுடைய நித்திய இழப்பிற்கான அடிப்படைக் காரணமாகும்.**"

நமதன்னை, பாவசங்கீர்த்தனத்தின் முக்கியத்துவத்தைப் பற்றியும், குருக்களின் முக்கிய பங்கைப் பற்றியும் ஆணித்தரமாக கூறினார்கள்: "மறுபடியும் புதுப்பிப்பதும், ஞான ஜீவியமளிப்பது மான பச்சாதாபம் என்னும் இந்த தேவதிரவிய அனுமானத்தின் மகத்துவத்தைக் கண்டு, தியானி. ஞானஸ்நானத்தில் தாங்கள் பெற்ற மாசற்றத்தனத்தை இழந்த பிறகு, இந்த தேவதிரவிய அனுமானமே இரட்சண்யமடைய ஒவ்வொருவருக்கும் மிக நிச்சய மான வழி என்பதை தங்களது மதியீனத்தால் உணராத மக்கள் இந்த தேவதிரவிய அனுமானத்தை வெகுவாக மறந்து போகின்றனர். அலட்சியப்படுத்துகின்றனர். மிக வேதனையளிக்கக் கூடிய விஷயம் என்னவென்றால், என் மகா பரிசுத்த குமாரனுடைய ஊழியர்களே இந்த தேவதிரவிய அனுமானத்துக்குரிய விலை யுயர்ந்த மதிப்பை அதற்கு அளிப்பதில்லை. திவ்விய இரட்சகரின் விலைமதிப்பில்லா திரு இரத்தத்தினால் இரட்சிக்கப்பட்ட ஆத்துமங் களை, சர்வேசுரனுடைய இராச்சியத்திற்கு மறுபடியும் கொண்டு வந்து சேர்ப்பதற்காக, தங்கள் கரங்களில் ஒப்படைக்கப்பட்டிருக்கும் விலையேறப்பெற்ற, மதிப்பிட முடியாத பொக்கிஷத்தை (பாவ சங்கீர்த்தனம்) அத்தேவ ஊழியர்கள் அலட்சியப்படுத்துகின்றனர். பாவசங்கீர்த்தனம் கேட்பது நேரத்தை வீணாக்கும் செயலென்றும், பலனற்ற செயலென்றும் நினைப்பவர்களும் உள்ளனர். ஓ! அந்தோ! நீ இப்பொழுது தியானித்துக் கொண்டிருப்பதை குருக்கள் நேரிடையாகப் பார்க்க நேர்ந்தால் - உன்னை இப்பொழுது ஒளிரச் செய்யும் ஒளியினால் அவர்கள் ஒளி பெற்றால் இந்தக் கொடையின் உயர்வைக் கண்டு தெரிந்துக்கொள்வார்கள்!..."

(தொடரும்)

## மன்னரின் குருபக்தி!

**பிரான்ஸ் நாட்டின் அரசரான அர்ச். ९—ம் லூயிஸ் குருக்களை மதித்து மிக்க ஆசாரத்துடன் நடத்துவார். அவர் பாவசங்கீர்த்தனம் செய்யும்பொழுது, கதவோ அல்லது ஜன்னலோ திறந்திருந்தால் அரசர் உடனே எழுந்து போய் அதைச் சாத்துவார். நாற்காலிகளை குரு அமர ஒழுங்கு செய்வார். சுவாமி, நீங்கள் என் தந்தை. நான் தான் உங்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்று தாழ்ச்சியோடு கூறுவார் !**

# கத்தோலிக்கக் குடும்பத்தின் மேன்மை

(இக்கட்டுரை ***"The Ideal of the Catholic Family"*** என்ற நூலில் வெளிவந்த ஒரு சேசுசபை குருவானவரின் பிரசங்கத்தின் தமிழாக்கம்)

## நல்ல பெற்றோராக இருப்பது எப்படி?

இக்காலத்தில் நல்ல பெற்றோராக இருப்பது எளிதான தல்ல. தவறும் மனித சுபாவமானது, அடங்கி பணிந்திருப்பதை எதிர்க்கும் தன்மை கொண்டதால் பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்ப்படிவதில்லை. ஆகையால்தான் பெற்றோருக்கு மிக கடுமை யான கடமைகளுண்டு என்று கூறுகிறேன்.

தங்கள் பிள்ளைகள் மட்டில் பெற்றோருக்கு இருக்கும் பொறுப்புக்களை விவரிக்கும் அம்சங்களைப் பற்றி பார்ப்பது நல்லது. சர்வேசுரனுடைய கற்பனைகளில் நாலாவது கற்பனை: "உன் பிதாவையும் மாதாவையும் சங்கித்திருப்பாயாக" என்பதாகும். இந்தக் கட்டளையானது பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் மட்டில் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை உள்ளடக்கியுள்ளது. இந்தக் கடமைகளையும், பொறுப்புக்களையும் நிறைவேற்ற பெற்றோர்கள் முதலில் அவைகளின் அம்சங்களை அறிந்து கொள்ள வேண்டும். அவைகளைப் பற்றி அடிக்கடி சிந்திக்க வேண்டும். அந்த அம்சங்களை கீழ் வருமாறு காண்போம்:

**(1)** பெற்றோர்கள் கொண்டுள்ள அதிகாரம் சர்வேசுர னுடைய அதிகாரமாகும். அதனைக் கொண்டு அவர்கள் தங்கள் குழந்தைகளை முதலில் மோட்சத்தை நோக்கியும், இரண்டாவது இவ்வுலகில் பயனுள்ள மகிழ்ச்சியான புண்ணிய வாழ்வை மேற் கொள்ளவும் வழிநடத்த வேண்டும்.

**(2)** பெற்றோருடைய அதிகாரம், அன்பை வெளிப்படுத்தும் படியாகவும் அதனையே அடிப்படையாகக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், அது பயனுள்ளதாக இருக்காது. சர்வேசுரன் மனிதர்கள் அன்பற்றவர்களாக இருக்க வேண்டுமென்று ஒருபோதும் கட்டளையிட்டதில்லை. ஆனால் சர்வேசுரன், மனிதர்கள் மீது தாம் கொண்டிருக்கும் அளவற்ற அன்பை, சிநேகத்தை வெளிக்காட்டுகிறார். இத்தகைய சிநேகமே அவரைச் சிலுவையில் மரிக்கத் தூண்டியது.

பெற்றோர்களின் அன்பு வெளிப்படையாக இருக்க வேண்டும். அதனால் தங்களைக் கண்டிக்கும் அதே பெற்றோர் தங்களை முழு இருதயத்தோடு சிநேகிக்கிறார்கள் என்பதை குழந்தைகள் காண்பார்கள். பெற்றோர்களின் அன்பு தியாகத்தின் மூலமாகவும், தங்கள் குழந்தைகளின் மனித இயல்பை மதிப்பதிலும், தோழமைக் கொள்வதிலும் வெளிப்பட வேண்டும். மேலும் அவர்களது கல்வி, வேலை, விளையாட்டு மற்றும் ஞான வாழ்வில் அவர்களது முன் னேற்றம் ஆகியவற்றில் அக்கறைக் கொள்வதிலும் பெற்றோர்களின் அன்பு வெளியாக வேண்டும்.

**(3)** பெற்றோர்களின் அதிகாரம் அவர்களது நன்மாதிரிகை யால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஞானம் மற்றும் நல்லொ ழுக்கக் காரியங்களில் எல்லாவற்றிலும் பெற்றோர்களின் முன் மாதிரிகையே குழந்தைகளுக்கு முதல் போதகமாக இருக்க வேண்டும்; நன் மாதிரிகை இல்லையெனில், கூறும் விளக்கங்களோ, கடைப்பிடிக்கச் சொன்னக் கட்டளைகளோ, செய்யக்கூடாது என்று விதித்தத் தடைகளோ, திருத்தங்களோ எவ்வித பயனையும் விளைவிக்காது.

**(4)** பெற்றோர்களுடைய அதிகாரம் அவர்களது குழந்தைகளின் குணம், வயது, ஆண் பெண் வேறுபாடுகளின்படி வெவ்வேறான முறையில் செயல்படுத்தப்பட வேண்டும்.

உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் ஒரு வித்தியாச மான மனித ஆளுமைத்தன்மையையும், அதனுடைய தனிப்பட்ட குணங்களையும், பாலியல்புக்கு ஏற்ப பண்புகளையும் கொண் டுள்ளது. அது மேலும் மேலும் முதிர்ச்சியை நோக்கி வளர வித்தியாசமான வழிநடத்துதல் தேவை. எல்லாக் குழந்தைகளின் தேவைகளில் அடிப்படையானது என்னவெனில், அவர்களது இளம் பிராயத்திலேயே பெற்றோர்களின் அதிகாரத்தை மதிக்கப் பயிற்சி விப்பதேயாகும். தங்கள் குழந்தைகளை, அவர்களது சிறு வயதி லேயே அவர்கள் விரும்புவது போல் நடக்க அனுமதிக்கும் பெற்றோர்கள் பின்னாளில் அவர்கள் வளர்ந்த பின்பு கீழ்ப்படிதலை எதிர்பார்க்க போவதில்லை. பிள்ளைகளை இளம் பருவத்திலேயே திருத்தாவிட்டால் அவர்கள் வளர்ந்து வாலிபராகிவிட்ட பிறகு பெற்றோர்கள் அவர்களை, தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி நல்லது செய்யவோ அல்லது தீமையிலிருந்து காப்பாற்ற முயல் வதோ பயனற்றதாகும்.

அதே சமயம் ஒவ்வொரு குழந்தையிடமும் அதனின் தனிப்பட்ட ஆண் அல்லது பெண் பாலினத்திற்கேற்ப பெற்றோர்களின் அணுகு முறை அமைய வேண்டும். தகப்பன் மகளை வழிநடத்து வதைப் போன்று மகன்களையும் வழிநடத்த முடியாது என்பதில் கவனமாக இருக்கவேண்டும். தாய்மார்களும் ஒரு மகனின் குணத்தைத் திருத்த முயலும், அதே முறையில் மகளையும் திருத்த முயற்சிப்பதில் எச்சரிக்கையாக இருப்பார்களாக. பெற்றோர் இருவரும் தங்களது பிள்ளைகளின் தனிப்பட்ட மனநிலைகளை அறிந்து, அதற்கேற்ப அவர்களை வழிநடத்த வேண்டும். அசமந்தமும், பயமும், ஆர்வமுமற்ற குழந்தைக்கு உற்சாகமும், சுயநம்பிக்கையும் தேவையென்பதையும்; குறும்புத்தனமான பிள்ளைகளுக்கு ஒழுங்கு, கட்டுப்பாடு மற்றும் அடிக்கடி திருத்துதல் போன்றவை தேவையென்பதையும் பெற்றோர்கள் அறிந்திருக்க வேண்டும். புத்திசாலித்தனமான சுட்டிப்பிள்ளைகளாக இருந்தால் புகழ்ச்சியையும், அதே நேரத்தில் தாழ்ச்சியையும் கற்பிக்க வேண்டும். மந்தப்புத்தியுள்ள பிள்ளைகளாக இருந்தால் பொறுமை யோடு திருத்துதல், புரிந்து கொள்ளுதல் ஆகியவற்றைப் பயன்படுத்தி அவர்களை மாற்ற முயல வேண்டும். இவையெல்லாம் இருந்தாலும் கூட, பெற்றோர்களை மதிக்க சிறுவயதிலேயே கற்றுக் கொடுக்கப் படாவிட்டால் ஒரு பயனும் ஏற்படப்போவதில்லை.

(தொடரும்)

# செய்திகள்

## மாதா பேராலயத்தில் அதிசய நிகழ்வு !

மெக்ஸிகோ நாட்டில் சமீபத்தில் சிசுக்கொலை சட்டப்பூர்வமாக்கப்பட்டது. இந்தக் கொடிய பாவச்செயலை கண்டிக்கும்படியாக அங்குள்ள புகழ்பெற்ற குவாடலூப் மாதா திருத்தலத்தில் 24.04.2007 அன்று புதுமையான நிகழ்வு நடந்தது! அது என்னவெனில், தேவாலயத்தின் மத்தியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அற்புத குவாடலூப் மாதா படத்தின் வயிற்றுப்பகுதியில் ஓர் அபூர்வ ஒளி தோன்றி, வயிற்றிலிருக்கும் சிசுவைப் போன்ற வடிவத்தைக் கொண்டு பிரகாசித்தது!! இதனை அன்று தேவாலயத்தில் இருந்த அனைவரும் கண்டு வியந்தனர். **- தேவ அன்னைக்கு ஆறுதல் கொடுப்போம்.**

- La Porte Latine.

## கர்தினாலின் அறிவிப்பு !

பாரம்பரியக் கத்தோலிக்க விசுவாசிகளால் ஆவலோடு எதிர்பார்க்கப்படும் திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை அனுமதிக்கும் உத்தரவுக்கான மடல் ‘Motu proprio’ எந்த நேரத்திலும் வெளியிடப்படலாம் என்று வத்திக்கான் நாட்டு செயலர் கர்தினால் பெர்டோன் ஆண்டகை மார்ச் 31-ம் தேதியன்று அறிவித்தார்.

- Zenith News.

## நவீன தப்பறை நூல்களுக்கு வத்திக்கானின் தடை !

ஸ்பெயின் நாட்டுக் குருவான ஜான் சொப்ரினோ (Fr. Jon Sobrino) என்ற சேசுசபையைச் சேர்ந்த விடுதலை இறையியலாளர் எழுதிய இரண்டு புத்தகங்கள் திருச்சபையின் விசுவாச சத்தியத்திற்கும் போதனைக்கும் ஏற்புடையதாக இல்லை என்று வத்திக்கானின் விசுவாச சத்திய சங்கம் மார்ச் 14-ம் தேதியன்று அறிவித்து தடை செய்துள்ளது.

- dici.org

## தமிழகத்தில் பாரம்பரிய லத்தீன் திவ்விய பலிபூசை நடைபெறும் இடங்களும் அதன் முகவரியும்:

**பாளையங்கோட்டை:**

அர்ச். தமத்திருத்துவ குருக்கள் இல்லம்,
ஆன்னி நகர், சீவலப்பேரி ரோடு
பாளையங்கோட்டை - 627 002.
தொலைபேசி எண்: 0462 - 2572389; 2586201.

**சிங்கம்பாறை :**

அர்ச். அந்தோணியார் ஆலயம்,
சிங்கம்பாறை. முக்கூடல் அருகில்,
திருநெல்வேலி மாவட்டம்,
தொலைபேசி எண்: 0462 - 2572389.

**கிறீஸ்துராஜபுரம் :**

கிறீஸ்துராஜா ஆலயம்,
கிறீஸ்துராஜபுரம், ஐரேனிபுரம் (P.O.),
கன்னியாகுமரி மாவட்டம்.
தொலைபேசி எண்: 04651 - 294785.

**நாகர்கோவில் :**

இராமன்புதூர்,
தொலைபேசி எண்: 0462 - 2572389.

**தூத்துக்குடி :**

அர்ச். பிரான்ஸிஸ் சவேரியார் ஆலயம்,
கேலெப் ஹோம்,
88B, வெற்றிவேல்புரம் (முருகன் தியேட்டர் அருகில்),
தூத்துக்குடி.
தொலைபேசி எண்: 9942707246.

**ஆசாரிப்பள்ளம் :**

அர்ச். அந்தோணியார் ஆலயம்,
மேல ஆசாரிபள்ளம், கன்னியாகுமரி மாவட்டம்,
தொலைபேசி எண்: 0462 - 2586201.

**திருச்சி :**

No-7, ஜவஹர் தெரு, 15-வது குருக்குச்சாலை,
குமரன் நகர், திருச்சி - 17
தொலைபேசி எண்: 0431 - 2770042.

**சென்னை :**

அர்ச். அந்தோணியார் மெட்ரிக்குலேஷன் பள்ளிவளாகம்,
சின்ன மலை, சென்னை - 600 015.
தொலைபேசி எண்: 044 - 22355389.


## Society of St. Pius X

#1, Marcel Lefebvre Place, Annie Nagar, Seevalaperi Road,
Palayamkottai, Tirunelveli – 627 002.
Ph: 0462-2586201; 2572389. e-mail: sspxindia@gmail.com